## கல்லூரியின் தொலைநோக்கு (Vision)

- உடுமலைப்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற, சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய தகுதியான மாணவர்களுக்குத் தரமான கல்வியை, சமூக மேம்பாட்டிற்குரிய வகையில் சூழலியல் மற்றும் சமூகநீதிக் கோட்பாட்டு அடிப்படையில் வழங்குதல்

## கல்லூரியின் குறிக்கோள் (Mission)

- தமிழக அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கை அடிப்படையில் உறுதியாகத் தகுதி உள்ள மாணவர்களைச் சேர்த்தல்
- மிகச் சரியான மேம்பட்ட தொழில்நுட்பக் கல்வி முறையிலான கற்றல், கற்பித்தல் பயிற்சிகளையும், சமூகப்பயன்பாடுடைய ஆய்வு செயல் பாடுகளையும் ஊக்குவித்தல்
- மாணவர்களிடையே 'என்னால் முடியும்' என்ற மனப்பாங்கினை வளர்த்து வேலைக்கான தகுதியினை உயர்த்துகின்ற வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல்
- சமுதாய இன நல்லிணக்கத்தினையும், சுற்றுப்புறப் பாதுகாப்பிற்குரிய பொறுப்புணர்வையும் மாணவர்களுக்கு அறிவு ரீதியாக உறுதியாக வழங்குதல்

# கல்லூரியின் வரலாறு சில குறிப்புகள்

உடுமலை நகருக்கு மேற்படிப்பு வசதி இல்லாத குறையைத் தீர்க்கும் பொருட்டு தமிழக அரசின் மேனாள் அமைச்சர் மாண்புமிகு திரு எஸ்.ஜெ. சாதிக்பாட்சா அவர்களின் அரிய முயற்சியாலும், மற்றும் தாளாளர்களின் உதவியாலும் 19.8.71 அன்று 345 மாணவர்களைக் கொண்டு புதுமுக வகுப்புகளுடன் சக்தி கூட்டுறவுத் தொழிற் கூடத்தில் **உடுமலைப்பேட்டை அரசு ஆண்கள் கல்லூரி** எனத் துவக்கம்.

## கல்லூரி உருவாக நிதி அளித்தவர்கள்

| | | |
|---|---|---|
| அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம், | பழனி | ரூ. 1,00,000 |
| திரு. நாராயணசாமி நாயுடு சேரிட்டி டிரஸ்ட், | பிரிமியர் மில்ஸ், பூலாங்கிணர் | } ரூ. 1,00,000 |
| வி.என். ராமச்சந்திர நாயுடு, | ,, | |
| வி.என். தாமோதரசாமி நாயுடு, | ,, | |
| பழனி ஆண்டவர் மில்ஸ், | உடுமலைப்பேட்டை | ரூ. 1,00,000 |
| வெங்கடேசா மில்ஸ், | ,, | ரூ. 1,00,000 |
| விஜயகுமார் மில்ஸ், | பழனி, | ரூ. 35,000 |
| லட்சுமி டெக்ஸ்டைல்ஸ் யார்ன் அன் ப்ராடக்ட்ஸ், | பெதப்பம்பட்டி | ரூ. 15,000 |
| திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், | திருப்பூர் | ரூ. 25,000 |
| டி.ஆர். நாராயணசாமி நாயுடு அன் சன்ஸ் சேரிட்டீஸ், | கணபதிபாளையம் | ரூ. 10,000 |

அமராவதி கோ.ஆப். சர்க்கரை மில்ஸ், கிருஷ்ணாபுரம் ரூ. 10,000
மடத்துக்குளம் டவுன் பஞ்சாயத்து ரூ. 5,001
கோ-ஆபரேடிவ் அர்பன் பேங்க், உடுமலை ரூ. 2001
கோ-ஆபரேடிவ் ஹவுஸ் கன்ஸ்ட்ரக்சன் சொசைட்டி, ,, ரூ. 1000
கோ-ஆபரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டி ,, ரூ. 2000
டவுன் கோ-ஆபரேடிவ் ஸ்டோர்ஸ் ,, ரூ. 500

**கல்லூரிக்கு நிலம் வழங்கியவர்கள்**

திரு ஜி.டி.கே. சிவசுப்பிரமணியம் 10.2 ஏக்கர்மதிப்பு ரூ. 50,000
திரு டி. நடராஜன் 8.03 ஏக்கர்மதிப்பு ரூ. 16,000
திரு ஜி. வெங்கட்ராமன் (ஆர்.ஜி. மணி) மதிப்பு ரூ. 20,000

**கல்லூரியானது 42.5 ஏக்கர் நிலப்பரப்பளவைக் கொண்டுள்ளது.**

1972-73 பி.ஏ., பொருளியல், பி.எஸ்ஸி., கணிதவியல் மற்றும் வணிகவியல் பட்டப்படிப்புகள் துவக்கம், பட்டப்படிப்புகளில் 340 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். பொருளியல் மற்றும் கணித வகுப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கற்பித்தல்.

1973-74 பி.ஏ., ஆங்கில இலக்கியம் பட்டப்படிப்புத் துவக்கம்.
1975-76 அனைத்து வகுப்புகளுக்கும் 7.2.76 அன்று புதிய கல்லூரிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டன,
1976-77 நாட்டு நலப்பணித்திட்டம் 100 மாணவர்களுடன் துவக்கம்.
1978-79 நாட்டு நலப்பணித்திட்டத்தில் 200 மாணவர்கள் சேர்க்கை.
1978-79 புதுமுக வகுப்புகள் நீங்க பி.எஸ்ஸி., வேதியியல் பட்டப்படிப்பு துவக்கம், தேசிய மாணவர் படையில் 50 மாணவர்கள் சேர்த்தல்.
1980-81 பி.ஏ., தமிழ் துவக்கம் மற்றும் பி.எஸ்ஸி., இயற்பியல் பட்ட வகுப்புகள் துவக்கம்.
1982 - 83 பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு.
1985-86 பட்ட வகுப்புகளில் தமிழ் வழிப் பிரிவில் மாணவியர் சேர்க்கப்பட்டனர்.
1986-87 பி.எஸ்ஸி., புள்ளியியல் பட்டப்படிப்பு துவக்கம். அனைத்து வகுப்புகளிலும் மாணவியர் சேர்க்கை.
1987-88 அமராவதி குடிநீர் வசதி.
1992-93 செப்டம்பர் முதல் **அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை** எனப் பெயர் மாற்றம்.
1995-96 நாடாளுமன்றத் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் பெருமதிப்பிற்குரிய திரு.பி.ராஜாரவிவர்மா அவர்கள் உதவியால் திருமூர்த்தி அணைக் குடிநீர் கல்லூரிக்கும் மற்றும் ஆய்வகங்களுக்கும் சிறந்த முறையில் வழங்கப்பட்டுப் பயனுறல்.
1998-99 கல்வியாண்டு பி.எஸ்ஸி., கணினி அறிவியல் பட்ட வகுப்புகள் துவக்கம் மாண்புமிகு அமைச்சர் நா.பொங்கலூர் பழனிச்சாமி மற்றும் மாண்புமிகு அமைச்சர் வ.முல்லைவேந்தன் மற்றும் மேன்மைமிகு உடுமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. தம்பு (எ) து.செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் கணினி அறிவியல் ஆய்வகம் 29.1.1999 அன்று துவங்கப்பட்டது.
1998-99 இல் நாட்டு நலப்பணித்திட்டத்தின் மகளிர் அலகு தொடக்கம்.
1.12.2000 கணினி அறிவியல் படிப்பு மற்ற மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் தனிச் சிறப்பு வகுப்புகள் ஆய்வகத்துடன் துவக்கம். (கணினி அறிவொளித் திட்டம்).

2001 சனவரி 26இல் முன்னாள் மாணவர் சங்கம் துவக்கம். பாரதியார் பல்கலைக் கழகத்தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ-மாணவியருக்கு ஈராயிரம் ரூபாய் பரிசளித்தல். கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் நடத்திப் பரிசளித்தல் ஆகியன ஆண்டு தோறும் ஆகஸ்டு 15, ஜனவரி 26ல் நடைபெற்று வருகின்றன.

உடுமலைப்பேட்டை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராம மாணவர்களின் நலன் கருதி 2003-2004 இல் சுயநிதிப் பிரிவுகள் துவக்கம், இளங்கலை வணிகவியல், வணிகவியல் (கணினிப் பயன்பாடு), இளம் அறிவியல் கணினி அறிவியல், முதுநிலை பட்ட வகுப்புகளில் தமிழ், வணிகவியல் மற்றும் இயற்பியல் வகுப்புகள் துவக்கம்.

2004-2005 இல் முதுநிலை பட்ட வகுப்பில் கணினி அறிவியல், இளங்கலை பட்ட வகுப்பில் மின் வணிகவியல் (இ.காமர்ஸ்) வகுப்புகள் துவக்கம்.

2004-2005 இல் உடுமலை சட்டமன்ற உறுப்பினர் மேன்மைமிகு திரு.சி.சண்முகவேலு அவர்களின் உதவியால் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து 9.1 இலட்சம் மதிப்பில் கல்லூரிக்குச் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது.

2006-07 இல் நாட்டுநலப்பணித்திட்டத்தின் 4 ஆவது அலகு தொடக்கம். தேசிய மதிப்பீடு மற்றும் மதிப்பேற்றுச் சான்றளிப்புக் கழகத்தால் B+ இல் சான்றளிக்கப்பெற்றது.

2006-2007 இல் சுயநிதிப் பிரிவுகள் முறையான பிரிவுகளாக மாற்றம்

2007-2008 இல் கல்லூரி சுழல் முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சுழற்சி முறை II இல் பி.காம்., பி.காம்.சி.ஏ., பி.எஸ்ஸி., கணினி அறிவியல பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன.

2009-2010 இல் தமிழக அரசின் சார்பில் 65 இலட்சம் மதிப்பில் ஆங்கிலமொழி ஆய்வகம் மற்றும் அண்ணா நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் (வணிகவியல் துறைக் கட்டிடம்) கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தன.

2009-2010 இல் கல்லூரியின் முதல் பெண் முதல்வராக முனைவர் புவனேஸ்வரி ராமானுஜம் அவர்கள் பதவியேற்பு.

கல்லூரி ஆங்கிலத்துறைத் தலைவர் திரு.பொ.சே.தமிழ்ச்செல்வன் மற்றும் முன்னாள் மாணவர் சங்கத்தினர் இணைந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி இயந்திரங்கள் இரண்டினை கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கினர்.

2010-2011 இல் ரூ. 35 இலட்சம் செலவில் கணிதத்துறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது.

2011–2012 இல் கணினி அறிவியல் துறையில் எம்.பில்., பிஎச்.டி., பட்ட வகுப்புகள் தொடக்கம். கல்லூரி முதல்வரைப் பொருளாளராகக் கொண்டு அரசு விதிமுறைப்படி முன்னாள் மாணவர் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

2012–2013 இல் இளநிலை தாவர உயிரியல், முது நிலைபட்ட வகுப்புகளில் ஆங்கிலம், பொருளியல், வேதியியல், புள்ளியியல், சுற்றுலாவியல், ஆகியவையும் ஆய்வுப் படிப்புகளில் தமிழ், இயற்பியல், வணிகவியல் துறைகளில் எம்.ஃபில்., பிஎச்.டி., முழுநேர பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன.

2014 இல் தேசிய தர மதீப்பீடு மற்றும் மதிப்பேற்றுச் சான்றளிப்புக் கழகத்தால் மறு மதீப்பீட்டில் "A" தரச்சான்று வழங்கப்பட்டது.

முதன்மைத்தரக் கல்லூரியாக "Grade -I" தரஉயர்வு பெற்றது.